ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

## திருமங்கையாழ்வார் அருளிச்செய்த பெரிய திருமொழி

# 5.8 – ஏழை ஏதலன்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 5.8 – ஏழை ஏதலன்

‡ ஏழை ஏதலன் கீழ் மகன் என்னாதிரங்கி ⋆
மற்றவற்கின் அருள் சுரந்து ⋆
மாழை மான் மட நோக்கி உன் தோழி ⋆
உம்பி எம்பி என்றொழிந்திலை ⋆
உகந்து தோழன் நீ எனக்கிங்கொழி என்ற சொற்கள் வந்து ⋆
அடியேன் மனத்திருந்திட ⋆
ஆழி வண்ண ! நின் அடி இணை அடைந்தேன் ⋆
அணி பொழில் திருவரங்கத்தம்மானே ॥ **5.8.1** ॥

வாத மா மகன் மர்க்கடம் விலங்கு ⋆
மற்றோர் சாதி என்றொழிந்திலை ⋆
உகந்து காதல் ஆதரம் கடலினும் பெருகச் ⋆
செய் தகவினுக்கில்லை கைம்மாறென்று ⋆
கோதில் வாய்மையினாயொடும் ⋆
உடனே உண்பன் நான் என்ற ஒண் பொருள் ⋆
எனக்கும் ஆதல் வேண்டும் என்றடி இணை அடைந்தேன் ⋆
அணி பொழில் திருவரங்கத்தம்மானே ॥ **5.8.2** ॥

கடி கொள் பூம் பொழில் காமரு பொய்கை ⋆
வைகு தாமரை வாங்கிய வேழம் ⋆
முடியும் வண்ணம் ஓர் முழு வலி முதலை பற்ற ⋆
மற்றது நின் சரண் நினைப்ப ⋆
கொடிய வாய் விலங்கின் உயிர் மலங்கக் ⋆

கொண்ட சீற்றம் ஒன்றுண்டுளதறிந்து ⋆
உன் அடியனேனும் வந்தடி இணை அடைந்தேன் ⋆
அணி பொழில் திருவரங்கத்தம்மானே ‖ **5.8.3** ‖

நஞ்சு சோர்வதோர் வெஞ்சின அரவம் ⋆
வெருவி வந்து நின் சரண் எனச் சரணா ⋆
நெஞ்சில் கொண்டு நின் அஞ்சிறைப் பறவைக்கு ⋆
அடைக்கலம் கொடுத்தருள் செய்ததறிந்து ⋆
வெஞ்சொலாளர்கள் நமன் தமர் கடியர் ⋆
கொடிய செய்வன உள ⋆
அதற்கடியேன் அஞ்சி வந்து நின் அடி இணை அடைந்தேன் ⋆
அணி பொழில் திருவரங்கத்தம்மானே ‖ **5.8.4** ‖

மாக மா நிலம் முழுதும் வந்திறைஞ்சும் ⋆
மலர் அடி கண்ட மா மறையாளன் ⋆
தோகை மா மயில் அன்னவர் இன்பம் ⋆
துற்றிலாமையில் அத்த ! இங்கொழிந்து ⋆
போகம் நீ எய்திப் பின்னும் நம் இடைக்கே ⋆
போதுவாய் என்ற பொன் அருள் ⋆
எனக்கும் ஆக வேண்டும் என்றடி இணை அடைந்தேன் ⋆
அணி பொழில் திருவரங்கத்தம்மானே ‖ **5.8.5** ‖

மன்னு நான்மறை மா முனி பெற்ற மைந்தனை ⋆
மதியாத வெங்கூற்றம் தன்னை அஞ்சி ⋆
நின் சரண் எனச் சரணாய்த் ⋆
தகவில் காலனை உக முனிந்தொழியா ⋆
பின்னை என்றும் நின் திருவடி பிரியா வண்ணம் ⋆
எண்ணிய பேர் அருள் ⋆

எனக்கும் அன்னதாகும் என்றடி இணை அடைந்தேன் ⋆
அணி பொழில் திருவரங்கத்தம்மானே ‖ **5.8.6** ‖

ஓது வாய்மையும் உவனியப் பிறப்பும் ⋆
உனக்கு முன் தந்த அந்தணன் ஒருவன் ⋆
காதல் என் மகன் புகல் இடம் காணேன் ⋆
கண்டு நீ தருவாய் எனக்கென்று ⋆
கோதில் வாய்மையினான் உனை வேண்டிய ⋆
குறை முடித்தவன் சிறுவனைக் கொடுத்தாய் ⋆
ஆதலால் வந்துன் அடி இணை அடைந்தேன் ⋆
அணி பொழில் திருவரங்கத்தம்மானே ‖ **5.8.7** ‖

வேத வாய் மொழி அந்தணன் ஒருவன் ⋆
எந்தை ! நின் சரண் என்னுடை மனைவி ⋆
காதல் மக்களைப் பயத்தலும் காணாள் ⋆
கடியதோர் தெய்வம் கொண்டொளிக்கும் என்றழைப்ப ⋆
ஏதலார் முன்னே இன் அருள் அவர்க்குச் செய்து ⋆
உன் மக்கள் மற்றிவர் என்று கொடுத்தாய் ⋆
ஆதலால் வந்துன் அடி இணை அடைந்தேன் ⋆
அணி பொழில் திருவரங்கத்தம்மானே ‖ **5.8.8** ‖

‡ துளங்கு நீண் முடி அரசர் தம் குரிசில் ⋆
தொண்டை மன்னவன் திண் திறல் ஒருவற்கு ⋆
உளம் கொள் அன்பினோடின் அருள் சுரந்து ⋆
அங்கோடு நாழிகை ஏழ் உடன் இருப்ப ⋆
வளம் கொள் மந்திரம் மற்றவற்கருளிச் செய்தவாறு ⋆
அடியேன் அறிந்து ⋆

உலகம் அளந்த பொன் அடியே அடைந்துய்ந்தேன் ⋆
அணி பொழில் திருவரங்கத்தம்மானே ॥ **5.8.9** ॥

‡ மாட மாளிகை சூழ் திருமங்கை மன்னன் ⋆
ஒன்னலர் தங்களை வெல்லும் ⋆
ஆடல் மா வலவன் கலிகன்றி ⋆
அணி பொழில் திருவரங்கத்தம்மானை ⋆
நீடு தொல் புகழ் ஆழி வல்லானை ⋆
எந்தையை நெடுமாலை நினைந்த ⋆
பாடல் பத்திவை பாடுமின் தொண்டீர் ! பாட ⋆
நும்மிடைப் பாவம் நில்லாவே ॥ **5.8.10** ॥

அடிவரவு — ஏழை வாதம் கடி நஞ்சு மாகம் மன்னு ஓது வேதம் துளங்கு மாடம் கை

ஏழை ஏதலன் முற்றிற்று

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்